*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC**.160/2021*

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW**-4 (**LW**-14)*

*Name / Father's Name: **திரு.காமராஜ் த/பெ. பொன்னன்***

*Village/ Taluk:*

*Caste, Religion:*

*Calling, Age:*

*Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.11.2023.*

துவக்க நேரம் 11.44

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் துறையில் பணிபுரிந்து, ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 11.09.2020 ம் தேதி நான் கெங்கவல்லி காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது, சேலம் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று, அங்கு சென்று, புகார்தாரர் திரு.சுரேஷ்குமார் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து, அந்த புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப குற்ற எண்.458/2020 இ.த.ச. பிரிவு 279, 337 ஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின்னர் அசல் ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துவிட்டு வழக்காவணங்களை மேல் விசாரணைக்காக நான் எடுத்துக்கொண்டேன்.

2) விபத்தில் காயம்பட்ட திருவேஷ் என்பவர் 11.09.2020 ம் தேதி இரவு 08.30 மணியளவில் இறந்துவிட்டதால் வழக்கின் சட்டப்பிரிவினை 279, 337 இதசவிலிருந்து 279, 304(A)ஆக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். பின்னர் 12.09.2020 ம் தேதி காலை 06.30 மணியளவில் நான் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு சாட்சிகள் அழகுவேல், சக்திவேல் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம்

தயார் செய்தேன். பின்னர் சாட்சிகள் 1 முதல் 3 வரையில் உள்ளவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) இறந்தவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணையும் செய்து பிரேத விசாரணை அறிக்கையும் தயார் செய்தேன். பின்னர் வழக்கு ஆவணங்களை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் திரு.முருகன் அவர்களிடம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் திரு.முருகன் அவர்கள், என்னிடம் விசாரணை செய்தார். **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3, பார்வை மகஜர் அ.த.சா.ஆ.4, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.5, பிரேத விசாரணை அறிக்கை அ.த.சா.ஆ.6, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7 ஆகும்.**

**குறுக்கு விசாரணை**

1) விபத்து சம்மந்தமாக எத்தனை மணிக்கு காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது என்றால் 11.09.2020 ம் தேதி இரவு 07.00 மணிக்கு தகவல் கிடைத்தது. எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றால் இரவு 08.00 மணியளவில் பதிவு செய்தேன். புகார் வாக்குமூலத்தில் எத்தனை மணிக்கு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 11.09.2020 ம் தேதி இரவு 09.00 மணிக்குத்தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) கெங்கவல்லி காவல் நிலையத்திலிருந்து, சேலம் அரசு மருத்துவமனைக்கு சுமார் 60 கி.மீ துாரம் இருக்கும் என்றால் சரிதான். உள்நோயாளியாக இருந்த சுரேஷ்குமார் என்பவரிடம் தான், நான் வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன் என்று தான் எனது போலிசார் விசாரணையிலும், நான் தயார் செய்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான், சுரேஷ்குமார் உள்நோயாளியாக இருந்ததாக தட்டச்சு பிழையாக அடிக்கப்பட்டுள்ளது. அவர் உள்நோயாளியாக சிகிச்சை பெறவில்லை.

3) விபத்தில் அடிபட்டவர்கள் முதலில் ஆத்துார் அரசு மருத்துவமனையில் முதலுதவி எடுத்துக்கொண்டு, பின்னர் தான் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்தார்கள் என்றும், மேற்படி ஆத்துார் அரசு மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஆத்துார் அரசு மருத்துவமனையிலிருந்து முதலில் காவல் நிலையத்திற்கு

தகவல் தெரிவிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சேலம் அரசு மருத்துவமனையிலிருந்துதான் முதல் தகவல் கிடைக்கப்பெற்றது.

4) விபத்தில் இறந்த திருவேஷ்-ன் சகோதரர் திரு.ராஜ்குமார் என்பவர்தான் திருவேஷ்-ஐ சேலம் அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி ராஜ்குமார் அவர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் சுரேஷ்குமார் அவர்களுக்கு இவ்வழக்கு சம்பவத்தை பற்றி பெரியசாமி என்பவர் தெரிவித்ததாகத்தான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பெரியசாமி என்பவர் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பெரியசாமி என்பவர் நெல் அறுக்கும் மிசின் வேலைக்காக வெளியூர் சென்றுவிட்டதாக சொன்னதால் அவரை விசாரித்து, சாட்சியாக சேர்க்க இயலவில்லை.

5) விபத்தில் அடிபட்டவர்கள் இருசக்கர வாகனத்தை தம்மம்பட்டி-கெங்கவல்லி சாலையில் மேற்கிலிருந்து கிழக்காக ஓட்டிவந்துள்ளார்கள் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் இருப்பவர்களாக முன்நிறுத்தப்பட்ட பாலாமணி, அண்ணாதுரை, கண்ணன், அந்தோனிசாமி ஆகியோர்களை இவ்வழக்கில் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால் அவர்கள் சாட்சிகளாக இருக்க முன்வராத காரணத்தினால் அவர்களை சாட்சிகளாக சேர்க்கவில்லை.

6) பார்வை மகஜரில், எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். பார்வை மகஜரை நான்தான் தயார் செய்தேன். தவறுதலாக கையொப்பம் செய்யாமல் விட்டுவிட்டேன். சாட்சிகள் சுரேஷ்குமார், அழகேசன் ஆகியோர்கள் இறந்த திருவேஷ்-ன் உறவினர்கள் என்றால் சரிதான்.

7) முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றும் நான் சம்பவ இடத்திற்கு நேரில் செல்லவில்லை என்றும் வழக்கின் சாட்சிகளை சம்பவ இடத்தில் வைத்து விசாரணை செய்யவில்லை என்றும் வழக்கின் ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து தான் தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

8) விபத்தில் இறந்தவருக்கு இழப்பீடு பெற வேண்டி புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரினை பெற்று தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் நடந்த சம்பவத்திற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. எதிரி ஓட்டிச்சென்ற காரில் எத்தனை பேர்

பயணித்தார்கள் என்றோ, அவர்களுக்கு ஏதேனும் காயம் ஏற்பட்டதா என்பது குறித்தோ விசாரணை செய்தீர்களா என்றால் அவர்களுக்கு காயம் ஏற்பட்டதாக எவ்வித தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

முடிவு நேரம் 12.15

ஓம்/-S.அருண்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.